1995 நவம்பர் 10] [பேரவைத் தலைவர்]

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்.

மாண்புமிகு டாக்டர் மு. அம்மமுத்து பிள்ளை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1995-ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய மற்றும் அறநிலைக் கட்டளைகள் (திருத்த)சட்டமுன்வடிவு" (சட்டமன்றப் பேரவைச் சட்டமுன்வடிவு எண் 42/1995) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

9. அரசினர் தனித் தீர்மானங்கள்

(அ) மின்வாரியத்திற்கு ஒரு சமயத்தில் கடனாக ரூ. 3500 கோடி இருக்கலாமென முடிவுசெய்யும் மாநில அரசின் செயற்குறிப்பு குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அரசினர் தனித் தீர்மானம். மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

[திரு. எஸ். கண்ணப்பன்] [*1995 நவம்பர் 10*

"1948–ஆம் ஆண்டு மின்சாரம் (வழங்கல்) சட்டத்தின் (மத்தியச் சட்டம் 54/1948) 65–வது பிரிவின் (1)–வது உட்பிரிவின்படி, தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு ஒரு சமயத்தில் கடனாக மூன்றாயிரத்து ஐநூறு கோடி ரூபாய் இருக்கலாமென்று மேற்படி சட்டத்தின் அதே பிரிவைச் சேர்ந்த (3)–வது உட்பிரிவின்படி முடிவு செய்யும் மாநில அரசின் செயற்குறிப்பு ஏற்கப்படலாம்" என்னும் தீர்மானத்தை மொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களின் தனித் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

(ஆ) வேளாண் கொள்கைப் பிரகடனத்திற்கு ஏற்பளித்தல் குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து அரசினர் தனித் தீர்மானம், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

***மாண்புமிகு திரு. கு.ப. கிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை, கீழ்கண்ட தமிழ்நாடு வேளாண் கொள்கைப் பிரகடனத்திற்கு* ஏற்பளிக்கிறது"

என்னும் தீர்மானத்தை மொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர்.

(*675–679 ஆம் பக்கங்களில் இணைப்பு 3–ஆக வைக்கப்பெற்றுள்ளது).

1995 நவம்பர் 10]

பிற்பகல் *2–55*

திரு. எஸ்.ஆர். பாலசுப்ரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு அரசினுடைய வேளாண் கொள்கையை விளக்குகின்ற வகையிலே கொண்டுவரப்பட்டு இருக்கின்ற தீர்மானம் நிகழ்ச்சி நிரலிலே சேர்க்கப்பட்டு இருக்கிறது. ஆனால் இப்படி ஒரு தீர்மானம் இந்த அவையின் முன்னாலே வைக்கப்பட இருக்கிறது என்பதை அலுவல் நிர்ணயக் குழுவிலேகூட தெரிவிக்கப்படவில்லை. நான்காண்டுகளுக்குப் பிறகு இந்த அரசு இப்படி திடீரென்று ஒரு தீர்மானத்தை இங்கே கொண்டு வந்திருக்கிறது. இதுகுறித்து இதற்கு முன்பு மாண்புமிகு முதலமைச்சரவர்களோ, மாண்புமிகு வேளாண் துறை அமைச்சரவர்களோ, இப்படி ஒரு தீர்மானம் கொண்டுவரப்பட இருப்பதாகத் தெரிவிக்கவில்லை. ஆளுங்கட்சியினுடைய சட்டமன்றக் கூட்டத்திலேகூட இப்படியொரு பொருள் பற்றி விவாதித்திருப்பதாகத் தெரியவில்லை.

இந்தச் சட்டமன்றம் கூட்டப்படுவதாக ஆளுநர் அறிவித்ததற்குப் பிறகு ஒரு கருத்தரங்கில் தலைமைச் செயலாளர் இதுபற்றித் தன்னுடைய கருத்துக்களைத் தெரிவித்திருக்கிறார். இப்படியொரு மாற்றம் வரவிருக்கிறது என்பதைச் சொல்லியிருக்கிறார்.

நான் இதை ஏன் குறிப்பிடுகிறேன் என்று சொன்னால், சட்டப் பேரவை, கூட இருக்கிறது என்று ஆளுநர் அறிவிப்புக்குப் பிறகு, எந்தவிதமான கொள்கை பற்றிய அறிவிப்பாக இருந்தாலும் அந்த அறிவிப்பு இந்தச் சட்டப் பேரவையிலேதான் வெளியிடப்பட வேண்டும். அதுவும்கூட அமைச்சரவர்களாலேதான் வெளியிடப்பட வேண்டும். அதற்குப் பதிலாக, முன்பாகவே இந்தத் தீர்மானம் குறித்து அல்லது அரசினுடைய கொள்கை குறித்துத் தலைமைச் செயலாளர் அவர்கள் ஏற்கெனவே அதைப்பற்றிப் பேசியிருப்பது இந்தத் தீர்மானத்தினுடைய சிறப்பைக் குறைத்துவிடுவதாகவே நான் கருதுகிறேன்.

அதுமட்டுமல்ல; தலைமைச் செயலாளர், ஆளுநர் சட்டப் பேரவையைக் கூட்டியதற்குப் பிறகு இப்படிப் பேசியது இந்த அவையினுடைய உரிமையை மீறியதாகவும் நான் கருதுகிறேன்.

இதுகுறித்துப் பேரவைத் தலைவரவர்கள் ஆய்ந்து ஒரு முடிவினைத் தெரிவிக்க வேண்டுமென்றும் நான் கேட்டுக் கொள்கிறேன்.

இந்தக் கொள்கை பற்றிய தீர்மானம் இப்பொழுது நிறைவேற்றப்பட இருக்கிறது. இந்தக் கொள்கையின் அடிப்படையில் வேறு ஏதேனும்

சட்டங்களைக் கொண்டு வருகின்ற எண்ணம் அரசுக்கு இருக்கிறதா என்பதையும் அரசு தெளிவுபடுத்த வேண்டும். அப்படிச் சட்டங்கள் கொண்டு வரப்படுவதாக இருந்தால் அதனுடைய நோக்கங்கள், விவரங்களையும் இந்த அவையிலே வெளியிட வேண்டும். அப்படி வெளியிடப்படுமேயானால் எங்களுடைய, அனைவருடைய கருத்துக்களையும் இங்கே வெளியிடுவதற்கு வசதியாக இருக்குமென்று நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஒரு மிக மிக முக்கியமானப் பிரச்சினை. இதற்குத் தொடர்பு இல்லாத பிரச்சினையாக இருந்தாலும்கூடச் சொல்லிவிடுகிறேன்.

கடந்த நான்கு நாட்களாக இராமேஸ்வரத்தில் குடிநீர் இல்லாமல் மக்கள் இருக்கிறார்கள் என்ற செய்தி வந்திருக்கிறது. அங்கேயிருக்கின்ற என்ஜின்...(மணியடிக்கப்பட்டது). ஒரே நிமிஷம். அது ஒரு பில்கிரிம் டவுன். யாத்திரிகர்கள் ஆயிரக்கணக்கில் அங்கே போகின்ற ஒரு நகரம். அங்கே நான்கு நாட்களாகக் குடிதண்ணீர் இல்லாமல் அவதிப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அதுகுறித்து உடனடியாக நடவடிக்கை எடுக்க வேணடுமென்றும் நான் கேட்டுக் கொள்கிறேன். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் முதலிலே சொல்லி விடுகிறேன், இருங்கள். எதிர்க்கட்சித் தலைவரவர்கள் ஒரு பிரச்சினையை எழுப்பி என்னுடைய முடிவையும் கேட்டிருக்கிறார்கள். இதுவொரு தனித் தீர்மானமாக அரசின் வேளாண் கொள்கை என்பது முடிவு செய்திருக்கிறோம். அதை இந்தப் பேரவைக்கு வைத்து இந்தப் பேரவையின் அங்கீகாரத்தைப் பெற வேண்டுமென்பதற்காக அந்தத் தனித் தீர்மானத்தை இங்கே வேளாண் துறை அமைச்சரவர்கள் வைத்திருக்கிறார்கள்.

எதிர்க்கட்சித் தலைவரவர்கள், இப்படிப்பட்ட ஒரு தீர்மானம் வரவிருக்கிறது என்று வெளியில் தலைமைச் செயலாளர் பேசியிருக்கிறார் என்கிற ஒரு பிரச்சினையை இங்கே எடுத்துச் சொல்லியிருக்கிறார். அதுபற்றி முறையான அறிவிப்பு எனக்கு ஏதுமில்லை. அது இருந்தால் அவர் என்ன பேசியிருக்கிறார் என்பது பற்றி நான் அறிந்து இங்கே சொல்ல முடியும்.

மேலெழுந்தவாரியாக எதிர்க்கட்சித் தலைவரவர்கள் இங்கே தெரிவித்திருப்பது, இப்படிப்பட்ட ஒரு வேளாண் கொள்கை என்பது சட்டமன்றத்தில் கொண்டு வர இருக்கிறது அரசு என்று அவர்

1995 நவம்பர் 10] [பேரவைத் தலைவர்]

தெரிவித்திருப்பாரேயானால் சட்டமன்றத்திற்குக் கொண்டு வர இருக்கிற அந்தக் கொள்கையை அவர் வெளிப்படுத்தியிருப்பாரேயானால் அது உரிமை மீறிய பிரச்சினையாக இருக்கலாம்.

ஆனால், இப்படிப்பட்ட, நேற்றேகூட ஒரு பிரச்சினையை இங்கே எழுப்பியபோது நான் அதைத்தான் சொன்னேன். சட்டமன்றத்திற்கு இப்படிப்பட்ட ஒரு பிரச்சினையைக் கொண்டு வரவிருக்கிறோம் என்று சொல்லுவதில், அது அவை உரிமை மீறல் என்கிற அளவுக்கு வராது என்கிற வகையிலேதான் நான் கணிக்கிறேன். நேற்றேகூடச் சொன்னேன். 1957-இல் ஜில்லா போர்டுகளையெல்லாம் ஒழிக்கப்போகிறோம் என்கிற ஒரு அறிவிப்பை வெளியில் அமைச்சர் தெரிவித்தார் என்கிற பிரச்சினை இங்கே வந்தபோது, அன்றைய பேரவைத் தலைவர் இதைத்தான் முடிவு செய்தார். சட்டமன்றத்திற்குள்ளே இதைக் கொண்டு வரவிருக்கிறோம் என்று சொல்லியிருப்பது தவறாக அல்லது அவை உரிமை மீறலாக எடுத்துக் கொள்ள வேண்டியதில்லை என்றுதான் அன்றைய பேரவைத் தலைவரும் அதைச் சொல்லியிருக்கிறார். ஒழித்து விடுகிறோம் என்று மட்டும் அவர் சொல்லியிருப்பாரேயானால் அது அவை உரிமை மீறல் பிரச்சினையாகும். ஆனால், சட்டமன்றத்திற்குள்ளே கொண்டு வரவிருக்கிறோம் எனறு சொல்லுகிறபொழுது அது உள்ளாட்சித் துறை மானியக்கோரிக்கையின்போது கொண்டு வரவிருக்கிறோம் என்றுதான் அதன் பொருளாகும். எனவே அது அவை உரிமை மீறல் பிரச்சினை ஆகாது என்று அன்றைக்கே இதுபோன்ற ஒரு பிரச்சினையில் அன்றைய அவைத்தலைவர் தீர்ப்பு வழங்கியிருக்கிறார்.

எனவே, சட்டமன்றத்திற்குக் கொண்டு வரவிருக்கிறோம் என்று தெரிவித்த அளவில் அது அவை உரிமை மீறல் பிரச்சினை ஆகாது என்றே நான் கருதுகிறேன். எனவே அதைப் பிரச்சினையாக எடுத்துக்கொள்ள வேண்டாமென்று கேட்டுக்கொள்கிறேன். அடுத்த பிரச்சினை, இதன் மீது வேறு ஏதேனும் சட்ட முன்வடிவுகள் கொண்டுவர இருக்கிறீர்களா என்பது போன்ற பிரச்சினைகளுக்கு அமைச்சர் பதில் சொல்வார்.

பிற்பகல் 3-00

மாண்புமிகு திரு. கு.ப. கிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த நிதிநிலை அறிக்கையின்மீது வேளாண்மைத் துறை பற்றி மானியக் கோரிக்கையின்மீது பதில் அளித்து பேசிக்கொண்டிருக்கும்போதே இதே அவையிலே மாண்புமிகு தமிழக முதலமைச்சருடைய ஒப்புதலோடு நான் அறிவித்திருக்கிறேன்.

தமிழகத்திற்கு என்று தனி வேளாண்மைக் கொள்கை இந்தியத் துணைக் கண்டத்திலே தமிழகத்திலே கொண்டுவரப்படும் என்ற அறிவிப்பை நான் ஏற்கெனவே அறிவித்திருக்கிறேன். அதன்படி ஓராண்டு காலமாக விவசாயிகள், விஞ்ஞானிகள், அதிகாரிகள், அரசுத் துறை அலுவலர்கள், பத்திரிகையாளர்கள் ஆகியோருடைய கருத்துக்களையெல்லாம் பெற்று, இந்த வேளாண்மைக் கொள்கை வகுக்கப்பட்டு இங்கே வைக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒன்றை நான் உங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். தமிழகத்தினுடைய வேளாண்மைக் கொள்கை வரவிருக்கிறது என்ற குறிப்பை தலைமைச் செயலாளர் இதுவரை பேசவில்லை என்பதை நான் இங்கே தெரிவித்துக் கொள்கிறேன். தவறான தகவலை மாண்புமிகு எதிர்கட்சித் தலைவர் சொல்லியிருக்கிறார்கள். இதற்கு அவர் பொறுப்பேற்றுக் கொள்கிறாரா? தமிழ்நாடு வேளாண் கொள்கை வரவிருக்கிறது என்று தலைமைச் செயலாளர் சொல்லியிருக்கிறார் என்று சொன்ன தகவலுக்கு அவர் பொறுப்பேற்றுக் கொள்கிறாரா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவர் சொல்லியிருப்பது பற்றிய முறையான அறிவிப்பு எனக்கு வரவில்லை. வந்தால் இந்தப் பிரச்சினைக்குள்ளே நான் போக வேண்டும். மேலெழுந்தவாரியாக அவரும் சொல்லியிருக்கிறார். அப்படிச் சொன்னாரா சொல்லவில்லையா என்பது நமக்குத் தெரியாது. அதையும் சொல்லிவிட்டேன். ஆகவே, அப்படி அவர் அவ்வாறு தெரிவித்திருந்தாலும்கூட அது அவை உரிமை மீறல் பிரச்சினை ஆகாது என்றும் சொல்லியிருக்கிறேன். எனவே, நீங்கள் சொல்லியிருப்பது போல அவர் இதுபற்றி வெளியில் எதுவும் கருத்து தெரிவிக்கவே இல்லையென்று இருக்குமானால் அது நல்லது. பிரச்சினையே இல்லை.

மாண்புமிகு திரு. கு.ப. கிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ் அமுதாய், நம் தவப் பயனாய், புகழ் கமழ்ந்திடும் சந்தனமாய்.....(குறுக்கீடு)

திரு. எஸ்.ஆர். பாலசுப்ரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரே ஒரு வார்த்தை. நீங்கள் தீர்ப்பளித்து விட்டீர்கள். உங்கள் தீர்ப்பை நான் ஏற்றுக்கொள்கிறேன். ஏனென்றால் உங்களுடைய தீர்ப்பைத்தான் விரும்பினேனே தவிர வேறு ஒன்றும் இல்லை. நிச்சயமாக தீர்மானம் என்று கூட அல்ல ஒரு சட்டம் கொண்டுவர இருக்கிறோம்

என்று தலைமைச் செயலாளர் கடந்த சில நாட்களுக்கு முன்னாலே, சட்டப் பேரவை கூட்ட அறிவிப்பு வந்ததற்குப் பின்னாலே ஒரு கருத்தரங்கில் சென்னையிலே பேசியிருக்கிறார்.

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது தமிழ்நாடு வேளாண்மைக் கொள்கை. சட்டம் கொண்டுவர இருக்கிறோம் என்று சொன்னால், எந்தச் சட்டம், எந்தத் துறைக்கு சம்பந்தப்பட்டது. எந்தத் துறையிலே கொண்டுவருகிறோம் என்று சொன்னார் என்று குறிப்பிட்டுச் சொல்ல வேண்டும். நான் இங்கே கொண்டுவருவது தமிழ்நாடு வேளாண் கொள்கை.

திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் விவரங்களுக்குள்ளே செல்ல வேண்டாம் என்று இருந்தேன். இதிலே கொள்கையாக எதையெல்லாம் அறிவித்திருக்கிறீர்களோ, வாணிபமாக கருத வேண்டுமென்று நீங்கள் சொல்லியிருக்கிறீர்களோ அதையே அவர் சொல்லியிருக்கிறார். பழங்கள், காய்கறிகள் வளர்க்கும் பூமிகளுக்கு இனிமேல் நில உச்சவரம்பிலிருந்து விலக்கு அளிப்பதற்கு தமிழக அரசு சட்டம் கொண்டுவர இருக்கிறது என்று தெளிவாகப் பேசியிருக்கிறார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அது அரசினுடைய ஆய்வில் இருக்கிற ஏதாவது பிரச்சினையாக இருக்கலாம். அது ஒரு கொள்கைப் பிரச்சினை என்று அல்ல.

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உச்சவரம்பு என்பது வருவாய்த் துறைக்கு சம்பந்தப்பட்டது என்பதை மாண்புமிகு எதிர்கட்சித் தலைவர் தெரிந்துகொள்ள வேண்டும். இது வேளாண்மைக் கொள்கை சம்பந்தப்பட்டது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ் அமுதாய், நம் தவப் பயனாய், புகழ் கமழ்ந்திடும் சந்தனமாய், சாதனை இமயமாய், சோதனைக்கே சோதனையாய், தூய தனிச் சுடராய், வேதமாய், வித்தகமாய், நாதமாய், நற்பெயராய், பாதம் பணிந்து வரும் பக்தர்களின் தேவதையாய், அல்லும் பகலும் நான் வணங்கும் தெய்வம், சொல்லும் செயலும் எனக்கே, எம்முன்னோருக்கு எடுத்துக் கொடுத்த ஏந்தலாய்

விளங்கி துலங்கி வரும் என்னுயிர் அன்னை டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் பாதங்களுக்கு என் வணக்கத்தைத் தெரிவித்து, இந்தியத் துணைக் கண்டத்திலே முதல் மாநிலமாக இருக்கக்கூடிய தமிழகத்திலே முதல் வேளாண்மைக் கொள்கையை அவைத் திருமுன் வைப்பதிலே பெருமைப்படுகிறேன்.

தமிழ்நாட்டில் வேளாண் வளர்ச்சியை மையமாகக் கொண்டே சமூக மற்றும் பொருளாதார மேம்பாடு அமைந்திருக்கின்றது. இந்திய அரசமைப்புச் சட்டத்தின்படி வேளாண்மை மாநில அரசின் அதிகாரப் பட்டியலில் உள்ளது. எனவே தான்..

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதை ரெக்கார்ட் பண்ணிவிட்டோம். பின்வருமாறு இதை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று சொல்லியிருக்கிறீர்கள் அல்லவா? நீங்கள் கொடுத்திருப்பது அப்படியே ரெக்கார்ட் ஆகிவிடும். மேற்கொண்டு ஏதாவது தொடர்ந்து சொல்ல வேண்டுமென்றால் சொல்லலாம்.

மாண்புமிகு திரு. கு.ப. கிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு வேளாண் கொள்கை என்ற கொள்கை புத்தக வடிவிலே இந்த அவையிலே வைக்கப்பட்டிருக்கிறது. இதிலே உள்ள தமிழ்க் குறிப்பை *நான் இந்த அவையிலே படித்ததாகக் கொண்டு அவைக்குறிப்பிலே ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அது நிறைவேற்றப்பெற வேண்டும் என்று கேளுங்கள்.

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பிரகடனத்தை ஏற்றுக்கொண்டு, அவை ஏற்பளிக்க வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறேன்.

பிற்பகல் 3-05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது சட்டமுன்வடிவு அல்ல,. தீர்மானம். அந்தக் கொள்கை அறிவிப்பை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று அவர் கேட்டிருக்கிறார். நாம் ஏற்பளிக்க இருக்கிறோம். "தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை தமிழ்நாடு வேளாண் கொள்கை பிரகடனத்திற்கு ஏற்பளிப்பு தரவேண்டும்" என்ற மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

---

*பக்கங்கள் 675 முதல் 679 வரை இணைப்பு 3 ஆக அச்சிடப்பெற்றுள்ளது.